# நெஞ்சினிலே



ஏ.எம். கஸ்புள்ளா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சினிலே

கவிதைகள்

ஏ.எம்.கஸ்புள்ளா

*வெளியீடு:*
*செய்ப் பதிப்பகம்*
*கட்டையாறு வீதி, சின்னக் கிண்ணியா 02*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| ஆசிரியர் | : ஏ.எம். கஸ்புள்ளா |
| முகவரி | : கட்டையாறு வீதி, சின்னக் கிண்ணியா 02 |
| கைபேசி | : 077 4488441 |
| பதிப்புரிமை | : ஆசிரியர் |
| முதற் பதிப்பு | : 04.04.2015 |
| வெளியீடு | : செய்ப் பதிப்பகம் |
| அட்டை, பக்க வடிவமைப்பு | : எம்.ஏ.எம். அஸ்மி, கிண்ணியா (075 7022680) |
| பக்கம் | : 88 |
| தாள் அளவு | : A5 |
| அச்சுப் பதிப்பு | : பேனா பப்பளிகேஷன், ஏ.ஜே. பிரின்ட். |
| விலை | : 200/= |
| ச.த.நூ.இல | : 978 955 4840003 |

| | |
|---|---|
| Name of the book | : "NENJINILE" |
| Author | : A.M. Hasbullah |
| Address | : Kattaiyaru Street, Kinniya 02 |
| Mobile | : 077 4488441 |
| Copy right | : Author |
| First Edition | : 04.04.2015 |
| Published by | : Zaib Publication |
| Cover Designed & Layout | : M.A.M. Asmy, Kinniya 04 (075 7022680) |
| Pages | : 88 |
| Paper Size | : A5 |
| Printed by | : Pena Publication, A.J. Print. |
| Price | : 200/= |
| ISBN | : 978 955 4840003 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அணிந்துரை

இலக்கியம் என்பது பிறிதானதொன்றல்ல இயற்கையின் பிரதிபலிப்பு, சமூக அமைப்பின் செயற்பாட்டு வடிவம், கலைத்துவத்தின் காலக் கண்ணாடி. அதற்கு எழுத்தே முன்னோடி, இதனை எடுத்துச் செல்ல படைப்பாளிகளால் மாத்திரமே முடிகிறது. காலத்திற்கு காலம் பெரும், பெரும் படைப்பாளிகள் உருவாகி வந்திருப்பது வியக்கப்படாத உண்மையே.

அத்தகைய வருகை ஈரமான இதயத்திலிருந்து ஆழமான பல கருத்துக்களை அள்ளித் தெளித்த போதுதான் நம்மை வியக்க வைக்கவும், விளிக்கவும், ஆச்சரியப்படவும் வைக்கிறது. அதற்கு எழுத்தே உயிரோட்டம் செய்கின்றது. இந்த எழுத்துலகமே இலக்கிய உலகமாக கலைத்துவமிகுந்து பரிணமிக்கின்றது.

அது சமூக அமைப்பின் விடியலையும், விமோசனத்தையும், எட்டியதாக படைப்புகள் இருக்க வேண்டும். அவைகளைத் தான் காலம் பொத்திப் போற்றிக் காப்பாற்றி பாதுகாத்து வைக்கிறது. இவ்வாறான படைப்புகளே பேசப்படுகின்றன. இவ்வாறான படைப்புகளில் அடிச்சுவட்டின் வழியாக ஒவ்வொரு படைப்பாளிகளும் தன்னை நிலை நிறுத்திக் கொள்ள வேண்டும்.

சமூக பிரங்ஞைகளுடனும், அதே பற்றுதலுடனும் சிறந்த படைப்புகளை கலை இலக்கிய உலகுக்குத் தர வேண்டும் என்ற அவாவுடன் படைப்புகள் வெளிவர முயற்சிக்க வேண்டும்.

அத்தகைய முயற்சியுடன் நம் நாட்டில் இளைய படைப்பாளிகள் உருவாகியிருப்பது இலக்கிய உலகின் ஆரோக்கியமான வரவாக நாம் காணலாம். இவ்வாறான எழுத்துக்கள் தொடர வேண்டும், வெறுமனே சப்பைக் கட்டான படைப்புகள் பேசப்படாது போய் விடும் என்ற எண்ணங்கள் ஆக்கதாரிகளுக்கு அவசியமாகும். அதில் சமூக ஊடுருவல்கள் பற்றிய தெளிவு பெற வேண்டும். அதை சாதாரண வாசகனும் நுகர்வதில் சொல்லாட்சி இலகு படுத்தப்பட வேண்டும் என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முனைப்புத் தேவை அந்த வகையில் கட்டையாற்றை வசிப்பிடமாகவும், றஹூமானியா நகரை பிறப்பிடமாகவும் கொண்டுள்ள கவிஞரும், கட்டுரை ஆசிரியருமான, அப்துல் மனாபு கஸ்புள்ளா, "கற்க கசடற" என்ற மாணவர்களுக்கான கட்டுரை நூலைத் தந்தவர். படிக்கும் காலத்திலேயே கவிதை எழுதுவதில் ஆர்வம் ஏற்பட்டதனால் தேசிய மட்டப் போட்டிகளில் பரிசும், பாராட்டும் பெற்றவர். அக்காலத்தே "அண்ணல்" என்னும் இலக்கிய ஏட்டின் ஆசிரியராகவுமிருந்து இலக்கியப் பங்களிப்புச் செய்தார்.

இவரது ஆக்கங்களுக்கு தினகரன், தினக்குரல், வீரகேசரி, விடிவெள்ளி, சுடரொளி, ஜனனி, மித்திரன் போன்ற தேசிய வார வெளியீடுகளும், ஓசை போன்ற சிற்றேடுகளும் களமமைத்துக் கொடுத்தன. அவற்றில் வெளிவந்த கவிதைகளுள் மொத்தமாக 62 கவிதைகளைத் தெரிவு செய்து 'நெஞ்சினிலே' என்னும் மகுடத்தில் இடம் பெறச் செய்துள்ளார்.

கவிதைகள் இலகு சொற்களால் அழகு தருகின்றன. இருண்மையோ, இறுக்கமோ காணாது காதல், கடமை, சமயம், சமூகம் என்று ஊடுருவிச் செல்கின்றது. கவிதைகள் மரபிலும், புதுக்கவிதையிலும் காணப்பட்டாலும் சிறுவர் பாடலாகவும், கிராமியப் பாடலாகவும் கலவை செய்த நூலாக பரிணமிக்கின்றது.

கவிஞர் கஸ்புள்ளா தொடர்ந்தும் எழுதி வருகின்றார். கவிதைகளில் சமூகப் பார்வை இழையோடிக் கிடக்கின்றது. அவரது ஆதங்கம் வெளிப்படையாகத் தெரிகின்றது. ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பது போல் "மறக்க முடியுமா?" என்ற தலைப்பில் வரும் கவிதை வரிகள்

**"வெடிக்கும் பொறிகள்**
**துடிக்கும் உயிர்கள்**
**வடிக்கும் கண்ணீர்கள்**
**மறக்க முடியவில்லை.**
**இந்தத் தீவின்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிம்மதியற்ற வாழ்வை
மறக்க முடிய வில்லை.
மனம்
மறக்க முடிய வில்லை"

காலக் கண்ணாடியாக நிகழ்வினைப் பாடம் படித்துக் காட்டுகிறது. ஒரு பதம் போதும் என்றாலும் இரு பதங்களை சுவைத்துத் தருவதில் மகிழ்வுறுகின்றேன்.

மற்றொரு தலைப்பிலான "ஏழைப் பாடகன்" என்ற கவி வரிகளில்

"தெரு வோடு
நான் பாடும் பாட்டு
குருவோடு வந்ததல்ல
என் தாயின்
கருவோடு வந்தது"

கவிஞர் தானொரு தான்தோன்றிக் கவிஞரென அறிமுகம் செய்கின்றார். இத்தம்பட்டம் இலக்கிய உலகுக்கு நல்நோக்கோடு பாதம் பதித்துள்ளார் எனத் தெரிகிறது. அவரது அனுபவங்கள் கவிதைகளாக மலர்ந்துள்ளது.

அன்று பெண் விடுதலைக்காகக் குரல் கொடுத்தான் பாரதி, இக் கவிஞர் பெண்களுக்கு பொறுப்புக்களைப் பகிர்ந்தளித்துக் கொடுத்து சிறப்பிக்க வேண்டும் எனப் பாடுகிறார். "ஏற்றம் வேண்டும்" என்ற கவிதையில்

"வீட்டுப் பொறுப்பிலும் பெண்களுக்கு
கூட்டுப் பொறுப்பு வேண்டும்
நாட்டுச் சிறப்பிலும் பெண்
நாமம் பதியப்பட வேண்டும்"

கலைத்துறையில் பட்டப்படிப்பை மேற்கொண்டிருக் கும் இவர் அமைதிப் போக்குடைய கவிஞர், எழுத்திலும் அமைதி காண்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுபவ பகிர்வுகளும் இவரது ஆக்கங்களில் வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றன. சமயப் பற்றுதலும் தெளிந்த நீரோடையாகிறது.

தாலாட்டுப் பாடல், ஒப்பாரிப்பாடல், காதல் பாடல், தொழிற் பாடல் என கிராமியப் பாடல்களையும், சிறுவர் இலக்கியமாகக் காணப்படும் சின்ன மகள், செல்லமே, இனி வருமோ, காட்டினிலே, எனது பொம்மை போன்றவையும் ஒரு வார்த்தை சொல்லிவிடு, நெஞ்சினிலே, என்பன பாடலாக்கமாகவும் அமையப் பெற்ற கவி வடிவங்கள் ஒரு மரத்துக் கிளை ஓட்டிகளாக கவிச் சுவை தருகின்றது. ஒட்டு மொத்தத்தில் கவிதைகள் நெஞ்சினிலே... பல பூக்களை பதம் பார்க்கும் பூச்சித் தேனாகி சுவைக்கிறது. புதுக் கவிதைகள் பூத்துச் சிரிக்கின்றது. மரபுகளும் படிக்கக் கூடியதாக உள்ளன.

கவிஞரின் முதல் கவிதை நூலாக வெளிவருவதில் அவரது முயற்சி வெற்றியளித்துள்ளது. இன்னும் எழுத எழுத ஆரோக்கியமான, கனதியாக கவிகள் அவரால் தர முடியும் என்பதை சோர்வடையாது இற்றைவரை எழுதிக் கொண்டிருக்கும் கவிஞருக்கு எனதூக்கமும் என்றுமிருக்கும் என்பதனை சொல்லிக் கொள்கின்றேன்.

எழுத்தாளரும், கவிஞருமான ஏ.எம். கஸ்புள்ளா என்றும் எனது மரியாதைக்குரிய உறவுக்காரரர். இவரது எழுத்துப் பணி, வளமுற்றுச் சிறக்க, இன்னும் பல தொகுப்புகள் வெளிவர எனதன்பார்ந்த வாழ்த்துக்கள்.

**கலாபூஷணம்: ஐதுருஸ் ஏ. ஹஸன்(ஜி)**
**கிண்ணியா 02**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "நெஞ்சினிலே.. இனிக்கின்ற கவிதைகள்...!

கவிஞர் ஏ.எம். கஸ்புள்ளாவைப் பற்றிச் சொல்வதற்கு முன்னால் எனக்கு முன்னால்...

வா வன் காடு வசந்தன்!
இவர் யாரென்று சொன்னால்...
அவர்தான் - கவிஞர் மனாபு ஏ. றசூல்!

... ... ... ...

எண்பதுகளில்...
கிண்ணியா பொது நூலகத்தில் நிறைய வாசித்தேன்;
இல்லை; இல்லை -
புத்தகங்களுக்குள் வசித்தேன்.

நூலகத்திலிருந்து இரவலாக எடுத்து வருகின்ற 'நாவல்களை' நண்பர் றசூலின் படிப்பறையில் இருந்து வாசிப்பேன்.

அந்தக் கதைகளையெல்லாம் நண்பன் நளீபுக்குச் சொல்லுவேன் றசூலின் படிப்பறைதான் எங்கள் கலையகம்

வீ.என். மதியழகன் மாதிரி... செய்திகள் வாசிப்போம்.
ஏ.ஸீ.ஏ.எம். புஹாரி மௌலவி மாதிரி... 'வரலாற்றில் ஓர் ஏடு' சொல் வோம்.
நாடகம் நடிப்போம்.
கவிதைகள் படிப்போம்.

... இப்ப தான் 'தொர' வருவாரு...
கதவோரம் வந்து நிப்பாரு...
அவர் தாரு...?
வேற தாரு...?
நம்ம கஸ்புள்ளா தான்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடடே;
அந்தக் காற்சட்டைப் பருவத்துக் காலத்து
'வெள்ளைத் தம்பி' இவன்தானா?
நானா எட்டடிதான்;
தம்பி 'பதினாறடி' பாய்கிறான்!

இது நிகழும்
சூழ் நிலைகள்தான் சிந்தனையைத் தீர்மானிக்கின்றன.
சிறிய வயதில் செவியேறிய விஷயங்கள்தான் பெரிய வயதில் சபை யேறுகின்றன.

ஆக,
கவிதைச் சூழலில் வளர்ந்த தம்பி கஸ்புள்ளாவும்
கவிஞன் ஆனதில் வியப்பில்லை.

'நெஞ்சினிலே..' இருக்கின்ற கவிதைகள் - நம்
நெஞ்சினிலே இனிக்கின்ற கவிதைகள் !

'மதியாதோர் என்றாலும்
மனதால் விரும்ப வேண்டுமே' - இந்த மனிதாபிமானம்
கவிஞனுக்கு மட்டும்தான் வரும்.
கஸ்புள்ளா கவிஞன் !

'பெற்றவரை மதித்து நடத்தல்
பெருமை சேர்க்கும்!'
இவனால் பெருமை பெற்றார்;
இவனது 'பெற்றார் !'

கவிஞர் ஏ.எம். கஸ்புள்ளாவின்
கவிதை வரிகளுக்குள்
வரிசைக் கிரமமாக...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம் கிண்ணியா
ஞாபக விழி விளிம்பில்
வந்து நிற்கிறது...
அழகிய கிராமமாக !

தாலாட்டு, காதல், இயற்கை, சமூகமென இவர் தந்திருக்கின்ற கவிதைகள் சின்னதாக இருந்தாலும் சமுதாயச் சின்னமாக இருக்கிறது.

கிண்ணியாவின் தலையெழுத்து -
எழுத்தில்தான் இருக்கிறது !
'தலையெடுத்து' வரும் தம்பி... கவிஞர் ஏ.எம். கஸ்புள்ளாவை மனம் நிறைந்து வாழ்த்துகின்றேன்

**கிண்ணியா அமீர் அலி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எழுத்துலகில் இடம் கிடைக்கும்

கிண்ணியாவிலிருந்து கவிதை எழுதிக் கொண்டிருக்கும் குழாத்தினுள் ஒருவர் தான் தம்பி ஏ.எம். கஸ்புள்ளா. 1990ம் ஆண்டிலே எழுத்துலகிற்கு காலடி எடுத்து வைத்தவர் இன்று வரை இலங்கையின் தேசிய பத்திரிகைகளுக்கு கவிதையோடு சிறுகதைகள், கட்டுரைகளும் எழுதி வருகின்றவர்.

சிறுவர்களுக்கான 'கற்க கசடற' என்ற நூலைத் தந்தவர். இன்று நெஞ்சினிலே என்ற இக்கவிதைப் புத்தகத்தைத் தந்து எம் நெஞ்சினிலே இடம்பிடித்துள்ளார்.

நல்ல கவிதை என்பது எழுதி எழுதி, திரும்பத் திரும்பத் திருத்தி எழுதும் போது வரும். அந்த வகையில் தம்பி கஸ்புள்ளாவும் எழுத ஆசைப்படுகின்ற ஒருவர் என்பதைச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகின்றேன்.

இவரது இலக்கியப் பயணம் மேலும் சிறப்புற வேண்டும் என்பதே எனது விருப்பம். தொடர்ந்து எழுதுங்கள். எழுத்துலகில் நிச்சயம் இடம் கிடைக்கும்.

எனது வாழ்த்துக்கள்!

**கலாபூஷணம் ஏ.எம்.எம். அலி**
**கிண்ணியா 05**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எழுதும் எண்ணமும்
## எனக்குள் இன்னமும்

எனது முதல் படைப்பான "கற்க கசடற" எனும் சிறுவர் கட்டுரைத் தொகுப்பிற்குப் பின் "நெஞ்சினிலே" என்ற என் கவிதைப் புத்தகம் இன்று உங்கள் கைகளிலே தவழ்கிறது.

நான் கவிதைகளாகத் தந்துள்ளேன். இதில் எது புதுக் கவிதை, எது மரபுக் கவிதை, எது பின் நவீனத்துவம் சார்ந்தது, என்பதனை நீங்களே படித்து விளங்கிக் கொள்ளுங்கள்.

ஒரு தாய் தன் பிள்ளையைப் பெற்றெடுக்கும் போது அடையும் சந்தோசத்தை விட தன் மகன் சான்றோன் என பிறர் மொழியக் கேட்டால் அவள் அதிக சந்தோசப்படுவதாக திருவள்ளுவர் குறிப்பிடுகிறார்.

அது போல 'நெஞ்சினிலே' என்ற இக் கவிதைப் புத்தகம் உங்கள் நெஞ்சினிலே இடம் பிடித்தால் எனது சந்தோசமும் இரட்டிப்பாகும் என்ற அவாவோடு, என்னை இன்னும் எழுதுங்கள் என்று உற்சாகப் படுத்தும் எழுத்துள்ளங்களுக்கும் என் இலக்கிய வளர்ச்சிக்கு துணை நிற்கும் கவிஞரும், ஆசிரியருமான என் சகோதரர் ஏ.எம்.ஏ. றசூல் அவர்களுக்கும், அணிந்துரை தந்த கலாபூஷணம் ஐதுருஸ் ஏ. ஹஸன் அவர்களுக்கும், வாழ்த்துரைகள் தந்த கலாபூஷணம் ஏ.எம்.எம். அலி, கிண்ணியா அமீரலி அவர்களுக்கும், என் கவிதைகளைப் பிரசுரித்த இலங்கையின் தேசிய பத்திரிகைகள், சஞ்சிகைகளுக்கும், "நெஞ்சினிலே" கவிதைப் புத்தகத்தை அழகுற வடிவமைப்புச் செய்த எம்.ஏ.எம். அஸ்மி அவர்களுக்கும் என் இதயத்திலிருந்து நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நன்றி!

என்றும் அன்புடன்
ஏ.எம். கஸ்புள்ளா
கட்டையாறு வீதி, கிண்ணியா 02
இலங்கை
(077 4488441)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறக்க முடியவில்லை!

வெடிக்கும் பொறிகள்
துடிக்கும் உயிர்கள்
வடிக்கும் கண்ணீர்கள்
மறக்க முடியவில்லை!

இனிமை யற்ற
இரவல் முகாமில்
திணித்த வாழ்க்கை
மறக்க முடியவில்லை!

படித்த பெண்கள்
பருவப் பெண்கள்
காணாமல்போன காலம்
மறக்க முடியவில்லை!

பிறந்த மண்ணை
பிரிந்து வாழும்
துறவி வாழ்வை
மறக்க முடியவில்லை!

இந்தத் தீவின்
நிம்மதியற்ற வாழ்வை
மறக்க முடியவில்லை
மனம்
மறக்க முடியவில்லை!

தமிழ் டெய்லி மிரர் - 2002
சவூதி அரேபியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வசந்தம் தா!

பொன்னந்தி மாலையே வா - நீ
பொழிகின்ற வண்ண அழகுதா
செம்மஞ்சல் வானமே வா - என்
சேலை நிற வர்ணம் தா!

சோலைப் பூவே வா - நான்
சுகம் காணும் மணம் தா
வாழைப் பூவே வா - என்
வாய்க்குச் சுவையைத் தா!

காலை வீசும் காற்றேவா - என்
காட்டில் மழையை நாளும் தா
பாலைப் பூவே வா - என்
படுக்கைக்கு நிழல் விரித்துத் தா!

இரையைத் தேடும் குயிலே வா - ஒரு
இனிய கீதம் காதில் தா
கரையைத் தொடும் அலையே வா - என்
கவலை துடைத்து வசந்தம் தா!

தினகரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு உறவு பிரிகிறது

உள்ளத்தில் உள்ளதை
மங்கை நீ புரியலையே
புரியாமல் ஏன் போகிறாய்
என்னையே நோகிறாய்!

சந்தர்ப்பம் என்னை, அன்று
சாட்சியாய் ஆக்கியது
அந்தக் காட்சியில்
நானுமொரு பாத்திரமானேன்

சொல்வது உண்மை, இதைச்
சொல்லும் போது நீயில்லை
உள்ளுக்குள் நானே
உருகுகிறேன் மானே!

கொண்ட நம் காதல்
இரண்டாக மாறுதே
உண்டான உறவும்
வானம் பூமியாகுதே!

வீரகேசரி வார வெளியீடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாய்த்துளிகள்

என் வாழ்க்கையின்
கதவுகள் மூடப்பட்டும்
மூடப்படாமலும்
அரைகுறையாய்க்
கிடந்த போது...

அதில்
ஆனந்தத்தின்
அரைப் பகுதியேனும்
அடைவதற்கான
ஆசைகள்
நம்பிக்கையின்றி
இதயப் படிகளே
அறுந்து கிடந்த போது...

பிறந்த மண்ணிலே
இறந்திட வேண்டும்
என்ற வண்ணமும்
என்னில்
இறந்து கிடந்த போது...

இன்று என்னை
சந்தோசப்படுத்தி
புதிய வாழ்க்கை
தருவது
இந்த சமாதானத்தின்
சிறுவாய்த்துளிகள்!

தினகரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏற்றம் வேண்டும்!

பெண்ணை பெண்ணே!
பழித்தல் மாற வேண்டும்
மண்ணில் எந்தப் பெண்ணும்
மாண்புற வாழ வேண்டும்!

சமய நெறியில் பெண்
சுதந்திரம் பேண வேண்டும்
இமய வாழ்விலும் பழைய
இருப்பிடம் நினைவில் வேண்டும்!

வீட்டுப் பொறுப்பிலும் பெண்ணுக்கு
கூட்டுப் பொறுப்பு வேண்டும்
நாட்டுச் சிறப்பிலும் பெண்
நாமம் பதியப்பட வேண்டும்!

பொங்கும் நெஞ்சமும் பொறுமையும்
பெண்ணில் இருக்க வேண்டும்
எங்கும் பெண்கள் வாழ்வு - அதனால்
ஏற்றம் காண வேண்டும்!

நவமணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உன் நினைவுகளில் நான்!

அன்புடன் காதலிக்கு!
உன்னுடன் பழகியதை
மறக்கச் சொன்னாய்
அதுவே
ஞாபகங்களாக...

எனது இல்லத்தின்
இருக்கையில்
இரவுப் படுக்கையில்
உனது நினைவுகளே!

எனக்கு
முன்னிருக்கும்
இந்த வேம்பு மரம்
தூரத்தே தெரியும்
நீண்ட மலைகள்
அதனிடையே
ஓடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நதிகள்
இவ்வாறு
தோன்றும்
ஒவ்வொரு
காட்சியும்
என் கண்களுக்கு
நீயாகிறாய்!

என்னை விட்டு
நீ பிரிந்த போதும்
சில நிமிடங்கள் கூட
உன் நினைவுகள்
என்னை விட்டு
பிரியவே இல்லை!

பிரியமானவளே...!
உன் நினைவுகளை
நான் பிரியும்
நாள் வந்தால்
அது மரணமாகவிருக்கும்
அப்போது
என் மனசு மட்டும்
உன்னிடமிருக்கும்.

ஜனனி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏழைப்பாடகன்

நான் வீதியை
மேடையாக்கிப் பாடும்
ஒரு பாடகன்

என் பாட்டுக்கு
கை தட்டுக்கள்
அந்த வானத்து
இடி மின்னல்கள்

நான் வறுமையில்
படித்த
என் வாழ்வின்
சரித்திரத்தை
பொறுமையுடன்
பாடும் பாடகன்

என் பாட்டுக்கு
இசைகள்
பலர் போடுகின்ற
அந்த
ரூபாய் நாணயங்களின்
ஓசைகள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் வாழ்வது குடிசை
என்
பாடல்கள் வாழ்வதோ
கோபுரங்கள்
அந்த கோபுரங்கள்
மக்களின் நெஞ்சங்கள்

தெருவோடு
நான் பாடும் பாட்டு
குருவோடு வந்ததல்ல
என் தாயின்
கருவோடு வந்தது

என் பாட்டின்
அட்சரங்களைக்
கேட்டுக் கேட்டு
அந்த
நட்சத்திரங்களும்
கண் சிமிட்டும்

சில்லறைக்காய்
பாடிப் பாடி
கடைசியில்
கல்லறைக்குப்
போகவிருக்கும்
நானோர்
ஏங்கும்
ஏழைப்பாடகன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முடிவு உன் கையில்

உன் கதையின்
முடிவைக் கேட்ட
நான்
ஒரு தென்றலில்
சிக்குண்டவனானேன்...!

கணவன்
கை விட்டுப் போன பாதை,
நீ இருக்கும் பாதை,
இரண்டுமே
வித்தியாசமானவை

தாங்க முடியாத
சுமைகளைத்
தாங்கிய உனக்குள்
ஏன் ?
இன்னொரு சுமை!

இந்த...
யுத்த பூமியில்
அந்தச் சுமையை
இறக்கி வைப்பதிலா...?
இறந்தே...
பிறப்பதிலா..?

சகோதரி!
எதில் உனக்கு
அதிக சந்தோஷம்?

தினகரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காதலை இணைக்கும் பாலம்

குயிலின் கீதம்
ஆனந்தம்
நதியின் சத்தம்
ஆனந்தம்
மலர் சிந்தும்
தேனால்
வண்டுக்கானந்தம்
பூ மலரும் காலை
கண்ணுக்கானந்தம்!

உலகத்தில்
ஒவ்வொரு காதலும்
பூக்களோடு
ஆரம்பிப்பதால்
காதலர்களுக்கு
பூக்களே ஆனந்தம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூவைப் போல
அன்புப் புன்னகை
பெண்ணிடமும்
இருப்பதால்
பெண்ணுக்குத்தான்
பூவென்பதில் ஆனந்தம்!

பூக்கள் பணிந்த
இடத்தில் இருந்தாலும்
பல உயர்ந்த இடங்களுக்கு
தேவைப்படும்
போதெல்லாம்
தேடப்படும்!

உலகத்தில்
முதலில்
காதலிக்கப்பட்டது
பூவே!
பெண்
அழகாக
இருப்பதால்
காதலிக்கப்படுவதில்லை
அவள் பூவாக
இருப்பதாலே
காதலிக்கப் படுகிறாள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூ ஒரு சாவி
பூட்டிக் கிடக்கும்
இதயங்களை
அதனால்தான்
திறக்க முடியும்

காதலியின்
வெறுப்பை
விருப்பாய் மாற்ற
பூ அவசியம்
பூ வென்றால்
அன்பாகும்

மணமேடை தொடக்கம்
பிணமேடை வரை
பூவிருக்கும்
பூவிருக்கும் இடமெல்லாம்
புனிதக் காதலுமிருக்கும்
எனவே...
காதலை
இணைக்கும் பாலம்
பூவே!

ஜனனி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒற்றுமை வேண்டும்

ஒற்றுமை வாழ்வில் வேண்டும் - அது
ஒவ்வொரு மனதிலும் வேண்டும்
பெற்றவரில் ஒற்றுமை வேண்டும் - அதை
பேணுவோரில் ஒற்றுமை வேண்டும்
கற்றவரில் ஒற்றுமை வேண்டும் - அதை
கற்பிப்போரில் ஒற்றுமை வேண்டும்

நாட்டிலே ஒற்றுமை வேண்டும் - அது
நெகிழாது இருக்க வேண்டும்
வீட்டுக்கு வீடு வேண்டும் - அது
விரிவடைந்து போக வேண்டும்
பாட்டிலே ஒற்றுமை வேண்டும் - அதில்
பண்புகள் வளர வேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதியில் நேர்மை வேண்டும் - அதனால்
நெஞ்சங்கள் மகிழ வேண்டும்
சாதிகள் ஒழிய வேண்டும் - எங்கும்
சமவொற்றுமை பிறக்க வேண்டும்
வாதத்தில் திறமை வேண்டும் - அது
வாழ்வுக்கு உதவிட வேண்டும்

அன்பால் ஒற்றுமை வேண்டும் - அந்த
ஆண்டவன் அருளும் வேண்டும்
துன்பங்கள் மறைய வேண்டும் - உள்ளம்
தூய்மை பெற்றிட வேண்டும்
இன்பங்கள் நிலைக்க வேண்டும் - இன
ஒற்றுமை மலர வேண்டும்

தினகரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏன் விட்டுப் போனாய்?

பூங்காற்று வந்து
தினம் பண் பாடுதே
நீரூற்றுப் பொங்கி
நெஞ்சில் அலை மோதுதே!

தேன் சிட்டு உன்னை
வண்டு தினம் தேடுதே
ஏன் விட்டுப் போனாய்
ஏக்கம் நிலையானதே!

சாந்த நடை எந்தன்
சயனத்தில் நிழலாடுதே
காந்த விழி ரெண்டும்
கவிபாட எனைத் தூண்டுதே!

ஓடும் நதியெல்லாம்
உனக்காய் தூதானதே
பாடும் குயில் கூட
பாங்காய் உனைத் தேடுதே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்டவனே வழிகாட்டு!

விடிகின்ற பொழுதில்
வீட்டிலே தந்தை;
குடித்தே வந்து
கும்மாளம் போடுகிறார்!

வயது வந்த மகளை
'வாழ வைக்கணும்' என்ற
நேயத்தை மறந்து குடி;
நோக்கமே பெரிதெனக் கொள்கிறார்!

குடித்த கடன் கேட்டு
கூட்டமாய் வீட்டின் முன்னால்;
பிடிவாதமாய் வந்து நின்று - பிறர்
பாய்ந்தே தந்தைக்கு ஏசுகின்றார்!

புத்தியில்லா அவருக்கு
புத்தகப் படிப்பும் ஏறவில்லை
எத்தனை நாள் எடுத்துச் சொல்லியும்
ஏனோ குடியை மறக்க வில்லை!

கொண்ட வாழ்வும்
குடியால் கெட முன்னரே
ஆண்டவா திருந்த இவருக்கு உந்தன்
அருட்பாதையை காட்டு!

தினகரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேண்டும் அமைதி!

உலகினில் நாங்கள் வந்து
உரிமையாய் வாழ வேண்டும்
கலகமே இல்லாத - அந்த
காலங்கள் வளர வேண்டும்!

அழுதிடும் மனங்கள் என்றும்
ஆனந்தம் காண வேண்டும்
வீழ்ந்திடும் காலம் மாறி
விடிந்திடும் பொழுது வேண்டும்!

பொய்யும் புரட்டும் எம்மில்
போக்கற்றுப் போக வேண்டும்
கைகளில் செல்வம் சேர்ந்து
களிப்புடன் வாழ வேண்டும்!

நோயினுள் நொந்த உள்ளம்
நொடிப் பொழுதில் மாற வேண்டும்
ஆயுதமுனை ஒழிந்து எங்கும்
அமைதி வழி காண வேண்டும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆனந்தம்!

கூடி வாழ்ந்தால்
கோடி ஆனந்தம்
வாடி வாழ்வோருக்கு
வசந்தமே ஆனந்தம்
தேடிய செல்வம்
தேவையில் ஆனந்தம்!

இல்லாமை என்பது
இல்லாததே ஆனந்தம்
பொல்லாமை அழிந்தால்
பூமிக்கு ஆனந்தம்
எல்லாமே இருந்தால்
என்றைக்கும் ஆனந்தம்!

போர் முடிவில்
வெற்றியே ஆனந்தம்
ஏர் பிடித்தால்
ஏழைக்கு ஆனந்தம்
கார் பொழிந்தால்
கழனிக்கு ஆனந்தம்!

பெண்ணுக்கு கற்பெனும்
பெருமையே ஆனந்தம்
விண்ணுக்கு வளரும்
வெண்ணிலவில் ஆனந்தம்
கண்ணுக்கு காணும்
காட்சியில் ஆனந்தம்!

தினகரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நெஞ்சினிலே!

பல்லு வெலக்கையிலே
பரிசம் போட்டவக
நெனப்பு மாறலயே
நெஞ்சில் நெனப்பு மாறலயே!

சமஞ்ச பூவெனக்கு
சாமம் இனிச்சிடுமோ?
அமையும் கணவனாலே
அன்பும் நிறைந்திடுமோ?

நிலைக்கும் வாழ்வினிலே
நினைவுகள் கசந்திடுமோ?
எனக்கும் வாழ்வு வந்தால்
எல்லாம் காண்பேனோ?

வீரகேசரி வார வெளியீடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சில்லறை வாய் பேசு!

விண்ணைக் கண்டு - நான்
நிலவைக் கண்டது
நேற்று வரைதான் - ஆனால்
பெண்ணே!
உன்னைக் கண்டு - நான்
காதல் கொண்டது
இன்று வரைதான்!

கன்னி நீ..
போகும் பாதையிலே
கண்ணி வைத்தேனே
அதனால்
தண்ணீர்த் தாகம் போல
தவித்திருந்தேனே!

நீ எண்ணியிதைப் பாராது
ஏனோ போகிறாய்
உன்னிரண்டு கண்களாலே
என்னை...
ஏனோ நோகிறாய்
உன்னைக் கண்டதால் காதல்
வந்தது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் உள்ளம்
வரைதான்
என்னைக்
கண்டதும்
நீ ஏனோ போட்டாய்
பின்னால்...
கறுப்புத் திரைதான்!

உன்னை அடைந்து
வெற்றி பெறவே
இது காதல் கதைதான்!

ஆதலால்...
சில்லறை வாய் பேசு
என் சிந்தை
இனிக்கட்டும்.

ஜனனி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலத்தால் அழியாததே

மறைந்து செல்ல மறுக்கும்
இந்தப் பொழுதுகள்...
உட்கார்ந்திருந்து
கால் வலித்தும்
உப்பு மணல்களின்
உரசல்களை விட்டெழுந்திட
மனசு வரவே இல்லை!
அலைகளின் நடுவே
தள்ளாடி
கரை வந்து சேரும் ஒரு
மீனவனின்
தோணியைப் போல
வலிகளின் வழிகளில்
வாழ்வுக்கான
வழி பிறக்கும்
என்ற உணர்தலைத்
தருகின்ற
கடல் அலையே
நீ கற்பிக்கும்
இந்தப் பாடம்
காலத்தால் அழியாததே...

வீரகேசரி வார வெளியீடு (01.09.2013)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழிவே இல்லை!

இதயத்தின் உறவைச் சொல்ல
இனியவள் இருப்பிடம் அறியேன்
உதயத்தின் பொழுதின் பின்பும்
உளறல்கள் எனக்குள்ளே!

கண்களில் கண்ட முகத்தை
கண்ணாடியில் வரைந்து பார்த்தேன்
உடைவது தெரிந்த பின்பு
உணர்வுகள் அறுந்து போனேன்!

வாழ்வில் வலி தரும் காதல்
வசந்தத்தின் எல்லையைக் காட்டும்
தோல்விகள் கண்ட போதும் - அதன்
தேவைகள் அதிக மாகும்!

வானத்தின் நிலவைப் போல
வலம் தரும் காதல் எல்லாம்
நாணித்துப் போனதில்லை
நான் கண்ட பெண்ணே அறிவாய்!

தினகரன் (18.08.2013)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணியம் கொடு!

தந்தை தாய் தன்னை
தாங்கு உள்ளம் தன்னில் - அவர்
சிந்திய வியர்வை எத்துனை
சிந்தையில் நினைப் பாயே!

எந்த நிலையிலும் அவரை
ஏழ்மை நிலைக்குத் தள்ளாதே
சொந்தம் ஒன்று அவரே
சொர்க்க வாழ்வு கொடுப்பாயே!

சீ என்ற வார்த்தையும் சொல்லாதே - அவர்
சிந்தை தளருமே! என்றும்
சிரிக்கின்ற முனையில் பேசு - அவர்
சினக்கின்ற வழி செல்லாதே!

வயது வந்த பின்பும்
விருப்பம் கொண்டு நடப்பாயே!
தயவு செய்து பெற்ற
தாயை தந்தையை கண்ணியமாக்கு!

தினகரன் (04.01.2014)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காட்டிலே!

காட்டுக்கு ராஜா சிங்கம்தான்
கரடி புலி அதன் சங்கம்தான்
வேட்டையாடும் விளையாடும்
வேடிக்கைகள் காட்டில் காணலாம்.

சிலை போல கற்கள் தோன்றும்
சில்லென மலையருவி பாயும்
மலை மேலே பூக்கள் பூக்கும்
மரம் விட்டு மரம் குரங்கு பாயும்.

மயில்கள் தோகை விரித்தாடும்
மான்கள் துள்ளித் துள்ளி ஓடும்
காய்கள் கனிந்து கீழே விழும்
கூட்டமாய் பறவை களதை வந்துண்ணும்

கானகம் கண்ணுக்கு நல்ல விருந்தாகும்
கவலைகள் யாவும் மெல்ல மறைந்தோடும்
தேன் வண்டுகள் ரீங்காரம் போடும்
தென்றலோ மேனியை வந்து தடவும்

சுடர் ஒளி (30.03.2014)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூங்காத விழிகள்!

எண்ணத்தில் ஆழ்ந்து நின்றேன்
'என்ன அழகு' எனச் சொல்லும்
வண்ணத்தின் வதனத்தில் கோலம்
பூண்டு நின்றாள் பெண்ணாள்!

கன்னத்தில் கை பதித்தாள்
கருவிழிகள் தானசைத்தாள்
பின் கூந்தலிலே மல்லிகை சூடி
பூவோடு பூத்து நின்றாள்!

அள்ளித் தரும் எழில் கொண்டாள்
அவள் விழியால் எனைக் கண்டாள்
உள்ளத்தில் காதல் தந்தாள்
உணர்வுக்கு விருந்தாய் வந்தாள்!

கண் கண்ட கன்னியவளை
கை பிடிக்கும் நாளதனை
என்மனம் எதிர்பார்த்தேங்கும் - இனி
என்று தான் விழிகள் தூங்கும்!

மித்திரன் வாரமலர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றி நிச்சயம்!

கண்களை மூடிக் கொண்டதால்
நான் படுப்பதாக
அவர்கள் நினைத்துக் கொண்டார்கள்

பார்ப்பவன் அந்த
பண்பாளனுக்குத் தெரியும்
என்னிதயக் கதவுகள்
திறந்தே கிடப்பதை

அது வெந்து போன
பலஸ்தீன உள்ளங்களுக்காக
பிரார்த்தனையில்
மிகுந்து கிடப்பதை

பலனுக்காக
நேரங்கள் செல்லலாம்
காலங்களும் செல்லலாம்

ஆனால் நீ ஒரு
விடியலின் காலைச் செய்தியில்
படித்துக் கொண்டிருப்பாய்
ஈமானியம்
வென்று விட்டதென!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொறுப்பு யார்!

உதவிடும் நெஞ்சம்
பலருக்கும் வேண்டும்
உதவாத நெஞ்சம்
உணர்ந்திட வேண்டும்

கஷ்டங்கள் என்பது
நிரந்தரமில்லை
காலங்கள் என்பதும்
நம் கைகளிலில்லை

தேவைகளைக்
குறைத்துக் கொள்வோம்
நல்ல தேடல்களை
வளர்த்துக் கொள்வோம்

உறவு என்பது
உயிர் உள்ளவரைதான்
அறிவு என்பது
என்றும் நிலைதான்

பூமியின் அழுக்கை அந்த
வானத்தின் மழை கழுவிடும்
நம் சமுகத்தின் அழுக்கை யார்
கழுவிடு வா ரோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றி காண்போம்!

தெருவில் கூடி நின்று பேசும்
தேவை யற்ற பேச்சால்
உருவாகும் சண்டை தானே
உணர்வோமே நண்பர் நாமே!

இழிவு கொண்ட செயலால்
இன்னல்கள் வந்து சேருமே
தெளிவு கண்ட தனை
தடுத்துக் கொண்டால் நலமா குமே!

இருகரம் சேர்ந்தி ருந்தால்
இலக்குகளும் நமதா குமே
வருகிற காலம் தன்னில்
வலிகளும் தூரமா குமே!

செல்லும் வழி அறிஞர்
சொல்லும் வழியா கனுமே
வெல்லும் வழிய தனால்
விடியலில் நிலையா குமே!

தினக்குரல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்ன மகள்!

சின்ன மகளின் சிரிப்பில்
சிந்தை குளி ராகுதே!
என்னைப் பிரியும் நேரம்
ஏன்தான் நெஞ்சு துயராகுதே!

பள்ளி செல்லும் காலை
பாங்காய் எழுந்திடு வாளே!
துள்ளி ஓடி விளையாட
தம்பியோடு சேர்ந் திடுவாளே!

வானில் நில வாய் என்னை
வட்ட மிடு வாளே
தேனின் சுவை யாய்
தங்க மகள் கதைத்திடுவாளே!

ஆடிப் பாடி நாளும்
அன்பாய் இருந்திடுவாளே!
தேடித் தேடி என்னைக் காணாமல்
தெரு விற்கும் வந்திடு வாளே!

தினகரன் (06.10.2013)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விடுங்க மச்சான்!

கொழுந்து பறிக்க போகணும்
கொண்டய விடுங்க மச்சான்
எழுந்து போங்க, நானும்
என் வேலயப் பார்க்கணும்
கொழுந்து பறிக்கிற நேரமிது
விடுங்க சீக்கிரம் போகணும்!

என்ன விட்டு நீ போனா
எண்ட மனசும் அழுமே
கண்ணுல நீயிருக்கிற
காட்சிய வந்து பாரு,
மண்ணுல நீ நடந்தாலும்
மனசில நீதான் நெறஞ்சிருக்க!

மச்சான் மனசத் தானே
மச்சி நானும் புரிஞ்சேனே
பச்ச மலைக்கு வாங்க
பக்குவமாப் பேசுவோம்
இச்ச கொண்டு காத்திருப்பேன்
இப்ப என்ன விட்டுடுங்க!

தினகரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனதில் உறுதி வேண்டும்

கொஞ்சம் கதைச்சி
கொஞ்சம் சிரிச்சி
வாழ்க்கை நடத்திடுவோம்!

கொஞ்சம் இன்பம்
கொஞ்சம் துன்பம்
வாழ்வில் அடைந்திடுவோம்!

நேற்று இன்று
நடந்தவைகள் மனதில்
நினைத்திடுவோம்!

நீயா? நானா?
வேற்றுமை இன்றி
ஒன்றாகக் கலந்திடுவோம்!

உதவும் மனதை
இரக்கக் குணத்தை
வளரச் செய்திடுவோம்!

வரும் காலம்
வளமாக நெஞ்சில்
உறுதி கொண்டிடுவோம்!

கிண்ணியா டுடே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எனது மடல்

மனதாலே என்னை
மறுக்காதே! உன்
நினைவாலே என்னை
நெருக்காதே! வெறுக்காதே!

உடலொன்று என்றும்
உனக்காக.. எழுதிய
மடலொன்று படித்திடு
மனம் கொண்டு!

விறகாகி நெருப்பாகும் உன்
விழி பார்த்தால் குளிராகும்!
இரவாகி நிலவாகும் நீ
இல்லையேல் இருளாகும்!

வெள்ளம் போல விழிகளில்
வழிகிற நீராகும்!
உள்ளத்தாலே நீ
உணர்ந்தால் அது சீறாகும்!

தினகரன் - செந்தூரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்து தூண்கள்

அல்லாஹ் ஒருவன் என்றும்
அடியான் ரசூல் தூதரென்றும்..
எல்லோருக்கும் சாட்சி பகரும்
ஏகத்துவக் கலிமா முதலாவதாகும்

பாவங்கள் போக்கும் - நாளும்
பரிசுத்தம் உள்ளம் ஏற்கும்...
காவலாய் எமைக் காக்கும்
கடமை இரண்டாம் தொழுகையாகும்

பசித் திருக்கும் உணர்வை
படிப்பிக்கும் மாதம் நன்மைகள்...
வசமாக நான்காம் கடமையாக
வந்ததே மாண்பென்னும் நோன்பாகும்

வறுமை நிலை வாழ்வில்
விரைந்தோட ஸகாத் ஏழைக்கும்
தரணும் என்ற தத்துவம்
தருகுதே மூன்றாமிக் கடமையாகும்

செல்வம் கொண்ட மனிதர்
செல்ல வேண்டும் - புனித
இல்லம் கஃபா அங்கு
இறுதிக் கடமை ஹஜ்ஜாகும்

வீரகேசரி (20.02.2011)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிரந்தரமில்லை

சமயம் தந்த வாழ்வை
சார்ந்து செல்லு மனிதா!
இமய வாழ்விலும் பிறரில்
இரக்கம் கொள்ளு மனிதா!

புழுதி கொண்ட வாழ்க்கை
பூமி தன்னில் மனிதா!
சுழலும் காற்று வந்தால்
சரிந்து விடுவோம் மனிதா!

நீண்ட கருணை காட்டும்
நீதன் ஒருவன் மனிதா!
வேண்டி நின்றால் அவனை
வேதனை களைவார் மனிதா!

காலம் தன்னில் நல்ல
காரியம் செய்திடு மனிதா!
ஞாலம் இதுவோ உனக்கு
நிரந்தரமில்லை மனிதா!

தினக்குரல் 22.05.2011



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மன்னிப்பாய்

அல்லாஹ் நீ ஒருவன்
அகிலத்தின் தலைவன்
எல்லாம் படைத்து
எம்மைக் காப்பவன்

என்றும் நீதான்
ஏகனானாய்
கொண்ட நம்பிக்கை
குறையா தானாய்!

அருளைத் தந்து
ஆட்சி செய்கிறாய்
பொருளைத் தந்து
பரிவு கொள்கிறாய்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானம் பூமி அதில்
வாழும் உயிர்கள்
காணும் போதினிலே
கல்பிலே நிறைகிறாய்!

அற்புதக் குர்ஆன்
அகிலத்திற் களித்தாய்
வெற்றி பெற்றெமை
வாழ்த்திடச் செய்தாய்!

பிறந்திட்ட நாழும்
பிழைகள் செய்தோம்
இறந்திட முன்னமே
இறைவா நீ மன்னிப்பாய்!

விடிவெள்ளி (12.05.2011)

(கல்பு - மனம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் வரிகள்

எண்ணம் தோன்றி மறைவதற்குள்
எழுதத் தூண்டும் என் பேனா
கண்ணில் எதைப் பார்த்தாலும்
கவிகள் தோன்றும் தானாய்!

வயல் வெளிகளின் பசுமை
வான் பறவைகளின் எளிமை
கயல் நிறைந்த நீள் கடல்
காட்சிகளின் அழகை எழுதுவேன்!

வறுமையில் வாழும் எளியோர்
வாழ்வு தனை எழுதுவேன்
பொறுமை வாழ்வு தந்த
பெரியோர் பற்றியும் எழுதுவேன்!

அகதியாய் வாழ்வோர்களின்
அவலங்களையும் எழுதுவேன்
சுகமாய் அவர் வாழும்
சுதந்திர நிலை காண எழுதுவேன்!

'எல்லாம் இறைவனின் படைப்பு'
என்றே தினமும் எழுதுவேன்
பொல்லாத பகைமை ஒழிந்து
புவியிது நலம் பெற எழுதுவேன்!

விடிவெள்ளி (26.01.2012)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனைவி எந்தன் செல்வம்

மனைவி வந்த நேரம்
மகிழ்வு வாழ்வில் கண்டேன்
நினைத்த விதமாய்: அவள்
நெஞ்சில் நிறைந்து விட்டாள்!

இல்லறம் அழகாய் நடத்தி
இன்பம் எனக்குத் தந்தாள்
நல்லறம் செய்து வாழ்க்கை
நன்றாய் அமையச் செய்தாள்!

அழகிய குழந்தை பெற்று
அன்பை பொழிகின்றாள்
பழகிடும் விதத்தால்: குடும்ப
பகைமை தீர்த்து வைப்பாள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துன்பம் கண்டிடும் போது
துணையாய் நின்று ஆறுதல்
நன்றே தருவாள்! ஒரு
நாளும் என்னைப் பிரியாள்!

சிக்கனம் அதிகம் செய்து
சிந்தித் தேதான் நடப்பாள்
எக் கணமும் என் உழைப்பை
ஏற்ற விதமாய் காப்பாள்!

எண்ணம் போல மனைவி
எனக்கு வாய்த்து விட்டாள்
மண்ணில் வாழும் வரையில்
மனைவியே எந்தன் செல்வம்!

தினக்குரல் (26.01.2012)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒருவன் அவனே!

அண்ணல் என்னும் மனிதர்
அமைத்துத் தந்த வாழ்வை
பின்னால் வந்த நாமும்
பின்பற்றி வாழ வேணும்!

உலக வாழ்க்கை யிங்கு
உயர்வாக எதுவு மில்லை
அழகு வாழ்க்கை அங்கே
அதற்காய் முயற்சி செய்வோம்!

வஞ்சகம், பொறாமை எல்லாம்
வாழ்வில் தினம் வெறுப்போம்
நெஞ்சினில் தீய எண்ணங்களை
நினைவிலிருந்து அகற்றுவோம்!

அல்லாஹ் ஒருவன் அவனே
அதிகாரம் மிக்கோன் என்றும்
சொல்லால் செயலால் அவனை
சிரம் பணிந்து தொழுவோம்!

தினகரன் (25.02.2011)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெருமை குறை!

சொல்லால் எதுவுமில்லை
செயலில் அழகைக் காட்டு
இல்லாதிருக்கும் மனிதருக்கும்
ஈதலில் அழகு உண்டு!

பிள்ளைச் செல்வ மிருந்தால்
பெருகும் வாழ்வு அழகு
எல்லை காத்து நிற்கும்
எங்கள் படையும் அழகு!

வறுமையே வந்தாலும் நல்
வழி செல்லுதல் அழகு
பொறுமை காத்து வாழ்வில்
பெருமை குறைத்து ஒழுகு!

தினகரன் (08.05.2011)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைந்த கனவு

மனசு மரத்துப் போனது
சிலரது நெஞ்சங்களில்
ஈரமில்லாததைப் பார்த்து
வீதியில் விழுந்து கிடப்பவனை
தூக்கி விடுவதற்கும்
பக்கத்து வீட்டு நோயாளியைப்
பார்ப்பதற்கும் மனிதப் பஞ்சம்
ஆனால்
இசைக் கச்சேரிகளில் மட்டும்
கூட்டம் கூட்டமாய்

வாக்குறுதிகள்
நிறைவேற்றப்படுவதில்லை
நம்பிக்கையை யார் மீது
வைப்பது என்ற
நம்பிக்கையும் தூரமாகியது

திருவள்ளுவர் சொன்ன
நா காக்க முடியவில்லை
நியூட்டனுக்கு அந்த
ஆப்பிள் பழம்
சிந்தனையை வளர்த்தது
என் தோட்டத்து மாங்காய்
தலையில் விழுந்தது
என் புலம்பலை கலைத்தது.

தினக்குரல் (03.05.2012)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்புதனை பற்றிடுவோம்!

மண் மீது கொண்ட வாழ்வில் - பிறரை
மதித்து நடத்தல் வேண்டுமே!
தன் மீது கடமையாகும் என்றும்
தன்னலம் கருதாத சேவையாகும்!

பெற்றவரை மதித்து நடத்தல்
பெருமை சேர்க்குமே - கல்வி
கற்றவரை மதித்து நடத்தல்
கல்வியின் சிறப்பாகும்!

முதியோரை மதித்து நடத்தல்
முக்கிய மாகுமே! நம்மை
மதியாதோர் என்றாலும்
மனதால் விரும்ப வேண்டுமே!

கெடுத்து வாழும் எண்ணம்
கேவல மாகுமே! அள்ளிக்
கொடுத்து வாழும் உள்ளம்
கொண்ட கொள்கை வேண்டுமே!

மனிதராய்ப் பிறந்து விட்டோம்
மனித நேயம் வேண்டுமே!
புனிதம் காத்து வாழ
புவியதில் பயிற்சி பெறுவோமே!

விடிவெள்ளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏ(ன்)மாற்றம்?

பெய்யும் மழையே
கொஞ்சம் நில்லு
என் காதலி நடக்கிறாள்

வீசும் காற்றே
உன் வேகம் குறைத்திடு
என் காதலி சிரிக்கிறாள்

இடியே மின்னலே
உன் சப்தம் வேண்டாம்
என் காதலி தூங்குகிறாள்

நிலவே
ஓரிடம் நில்லு
உன் முகமா?
என் காதலி முகமா?
அழகெனப் பார்த்திட

இவ்வாறு
அவள் விரும்பும்
ஒவ்வொன்றுக்கும்
நான்
கட்டளை விடுகின்றேன்
அவளோ என் மீது
கற்களை வீசுகின்றாள்

ஓசை 2013



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இனி வருமோ?

பள்ளிக்கூடம் - அதில்
படிக்கும் நேரம்
நெல்லி மரத்தே - எம்
நேரம் போகும்

வயலின் வரம்பில் - தினம்
விளையாடித் திரிந்தோம்
வாய்க்கால் நீரில் - நாம்
குளித்து மகிழ்ந்தோம்

பனை மரத்தில் கூடி
பாங்காய் ஏறி
நினைத்த நேரம் - நிறைய
நுங்கு பறித்தோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீனா ரீச்சரின் - அந்த
மின்னல் சிரிப்பும்
ஆனாப் படிப்பும் - கேட்டு
ஆனந்தம் அடைந்தோம்

கூடிக் குலாவி - நட்புக்
கூத்தடித்தோம்
ஆடிப் பாடி - தினம்
அன்பு கொண்டோம்

அந்தக் காலம் - சேர்ந்து
ஆடிய ஆட்டம்
இந்தக் காலம் - எம்முடன்
இனி வருமோ?

தினக்குரல் (14.07.2014)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வானம்

பரந்த வானம்
பார்ப்போமே
திறந்த வெளியில்
நடப்போமே!

வானம் எங்கும்
மின் மினிகள்
காணும் எங்கள்
கண் மணிகள்!

ஓடுகின்ற வண்ண
வண்ண மேகங்களே
கூடி நின்று
மெல்ல மெல்ல பாடுங்களே!

தினகரன் - செந்தூரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாறிட மாட்டாயோ?

பணத்தில் ஆசை கொண்டாய்
பண்பில் ஆசை மறந்தாய்
சினத்தில் ஆசை கொண்டாய்
சிரிப்பை மறந்தே போனாய்

நல்லவர் நட்பை வெறுத்தாய்
நாடிடும் ஏழையை விரட்டினாய்
உள்ளவர் பக்கம் சார்ந்தாய்
உனக்கோர் கூட்டம் சேர்த்தாய்

நீதிகள் உன்னிடம் இல்லை
நினைத்ததை சாதிக்க விரும்பினாய்
சாதிகள் பார்த்துப் பழகினாய்
சாதகமாய் எதையும் ஆக்கினாய்

சண்டைகள் பிடித்து நின்றாய்
சமரசம் வேண்டாம் என்றாய்
என்றுமேன் இந்த நிலையோ?
ஏன்தான் மாறிட மாட்டாயோ?

அல்-ஹஸனாத் 2013



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உயிர்ப்பிப்போம்!

நெறிகளில் நேர்வழி சென்று
நீதியை வாழ்வில் கொண்டு
அறியாத சமுகத்திற்கு
அறிவினை புகட்டி நின்று
பெரியதோர் மாற்றம் கண்ட
பெருமானாருக்கு ஸலாம் சொல்லுவோம்!

உதயத்தின் ஒவ்வொரு பொழுதும்
உயர்வானவன் அல்லாஹ் தந்த
வேதமாம் அல் குர்ஆனின்
வழியிலே செல்ல வேண்டும்
'அதுதான் வாழ்க்கை' என்ற
அண்ணலாருக்கு ஸலவாத்து சொல்லுவோம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவனின் தூதுவர்களில்
இறுதியாய் வந்த நபியின்;
குறை விலாத கருணையாலே
கூடிய கூட்டத்தோடு வணங்கும்;
'இறைவன் ஒருவன் என்ற'
இனியவர்க்கு 'துஆ' செய்வோம்!

சோதனைகள் பல கண்ட போதும்;
சோர்ந்திடாது பொறுமையாகி நபியின்;
சாதனைதான் இஸ்லாம் நாளும்;
சகத்தினிலே வளரக் கண்டோம்.
ஆதலால் சேர்ந்து ஒன்றாய்
அவ்வல் கலிமாவை உயிர்ப்பிப்போம்!

அல் - ஹஸனாத் (04.2014)

(ஸலாம் - சாந்தி உண்டாக)
(ஸலவாத்து - வாழ்த்து)
(துஆ - பிரார்த்தனை)
(அவ்வல் கலிமா - இஸ்லாத்தின் முதல் கடமை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழில் தரும் பூமி!

எழுத எண்ணம்
எனக்குள் கொண்டேன்.
அழுத பிள்ளைக்கு
ஆராரோ என்றேன்.

கூவும் சத்தம் ஓ!
குயிலின் கானமோ?
தாவும் குரங்கே, அந்த
தாவரந்தான் தாங்குமோ?

விமானம் வானில்
விளையாட்டுக் காட்டுதே
ஆமையோ நிலத்தில்
அழகுத் தலையை நீட்டுதே!

குருவிக் கூட்டம் தங்கும்
கூட்டை வீட்டிலும் கட்டுதே
அருவி பாயும் அந்த
ஆழியில் பருந்து பசியாற்றுதே!

என்னென்ன காட்சிகள்தான்;
எழில் தரும் இப்பூமியிலே;
எண்ணங்களை எழுதினேன்
எனக்குள் கவிதையானதே!

சுடர் ஒளி (28.09.2014)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்றும் வாழ்பவன்

கிழக்கின் வீரன் - என்றும்
கிலி கொள்ளா நெஞ்சன்.
பழக்கத்திற்கு இனிமை யானவன்.
பண்பாளன் ஏ.எல்.அப்துல் மஜித்.

மூதூரின் அழகு முத்தாகி;
முதல் பட்டம் பெற்றான்.
யாதும் ஊரே என்று
யதார்த்த வழி சென்றான்.

காடு வெட்டி எங்களை;
கழனி செய்யச் சொன்னான்.
பாடு பட்டு வாழ்வோரையும்
பாசம் கொண்டு அணைத்தான்.

மீனவ னுக்கும் தோழனாகி
மீள்குடியேற வழி செய்தான்.
யானைக் காடுகளுக்கும் சென்றிடுவீர்.
யாமிருக்க பயமேன் என்றான்.

பேர் சொல்லும் படியாக
பரந்த சேவை செய்தான்.
ஊரில் உள்ளவர்களின் எல்லா;
உள்ளங்களிலும் இன்றும் வாழ்கிறான்!

ஓசை (2014 ஜனவரி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வா நண்பனே!

சந்திரனைத் தொட்டிடுவோம்
சந்தேகத்தை விட்டிடுவோம்.
சிந்தனையில் தெளிவுறுவோம்.
சித்திரமும் வரைந்திடுவோம்.
வா வா நண்பனே!

எண்ணங்களைப் பகிர்ந்திடுவோம்
ஏழைகளுக்கும் உதவிடுவோம்
அன்னையினை மதித்திடுவோம்
அப்பாவினை அணைத்திடுவோம்
வா வா நண்பனே!

பொறாமையைக் களைத்திடுவோம்
பொறுமையைக் கைபிடிப்போம்
வறுமையைத் தாங்கிடுவோம்
வாழ்வினைப் புதுப்பிப்போம்
வா வா நண்பனே!

உள்ளதைச் சொல்லுமந்த
உள்ளங்களை நேசிப்போம்
நல்லதைச் செய்கின்ற
நாட்டினரை உருவாக்குவோம்
வா வா நண்பனே!

சுடர் ஒளி (23.03.2014)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உனதன்பு வேண்டும்!

மாலை யிட்ட உனது
மனைவி நானா கினேன்.
ஏழை என்றாலும் மன்னவனின்
எண்ணம் போல நடப்பேன்.

வேலைப் பளுவில் உன்;
வேதனையில் பங்கே ற்றிடுவேன்.
காலை மாலையென வீட்டுக்
கடமைகளையும் செய்தி டுவேன்

இழிவு தரும் நடத்தைகளை
இல்லாள் நான் வெறுத்திடுவேன்
எழிலான வாழ்வு பெறவே
என்றும் நான் நினைத் திடுவேன்

உறவுகளை அழைத்து நல்விதமாய்
உபசரித்து உள்ளம் மகிழுவேன்
வரவு செலவுகளை அறிந்து
வாழ்வை ஒழுங்குற அமைத்திடுவேன்

இன்பம் துன்பம் இரண்டிலும்
இணையாய் நானி ருப்பேன் - உன்
அன்பு மட்டும் இருந்தால்
ஆனந்தம் என்றும் அடைந்திடுவேன்!

தினக்குரல் (24.11.2013)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதய சூரியன்!

உதய சூரியன் 'நெல்சன் மண்டேலா'
உறைந்த உள்ளங்களின் தலைவன்.
மதியாலே வென்றவன் - எம்
மனதிலே நிலை நின்றவன்!

கறுப் பினத்தின் 'காதலன்'
காட்டிய வழிகள் எத்தனை
பொறுப்பு ணர்ந்த செயலாலே
புதிய சுதந்திரம் தந்தவன்!

தலைவன் நீயே! தனிமையில்லை
துணிந்தவனே! துயர மில்லை.
வளைந்திட வாழ்வு வழிகளில்லை
வகுத்தாயே வாகை சூடினோம்!

உலக தெரு வெங்கும்
உரைத்திடுமே உன் நாமம்
மலர் கொண்டு தூவிடவே - இனி
மலர்க் கூட்டம் பூத்திடுமே!

சுடர் ஒளி (26.01.2014)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுருட்டிய சுனாமி!

மேகத்தைக் கிழித்து செல்லும்
வேகமான காற்றைப் பார்த்திருக்கிறேன்!

இடி மின்னலோடு
மழையைப் பார்த்திருக்கிறேன்!

இரவு பகல்
தூங்குகின்ற
மனிதர்களைப் பார்த்திருக்கிறேன்!

அடம் பிடித்தழும்
குழந்தைகளைப் பார்த்திருக்கிறேன்!

வாகன விபத்துக்குள்ளாகி
மரணித்த, உயிர் தப்பிய
மனிதர்களைப் பார்த்திருக்கிறேன்!

உயிர்களை உறவுகளை
உணர்வுகளை
அடித்துச் சென்ற கடல்
பேரலை சுனாமியே!
இன்றுதான்
உன்னைப் பார்க்கிறேன்
உள்ளம் நோகிறேன்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு வார்த்தை சொல்லிடு!

என்னவளே! என்னவளே!
எங்கு நீ சென்றாயோ?
எண்ணங்களை எத்தி வைத்தேன்
ஏற்றுத் தான் கொண்டாயோ?

உருண்டதாய் உலக மிதில்
உருளுகிறேன் உன்னை நினைச்சே!
இருண்டு போன இரவாக
இதய மிங்கே மாறியாச்சே!

பூமி தான் பாதியழகு
பூவே நீதான் மீதியழகு
தேமி நான் அழுகிறேன்
தேவி உனைக் காணாமலே!

திரும்பி நீ வருகை யிலே
திருப்பம் ஒன்று வேண்டுமே - உன்
விருப்பம் சொல்லிவிடு
விடியல் நான் காணணுமே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவனம் உனதாகிடும்

பிறப்பதிலே இறப்பதை எழுதினான்.
முந்தலும் பிந்தலும் அவனிடமே
இன்று நான் நாளை நீ
என்று பயணம் தொடருமே!

வாழ்வினிலே சோதனைகள்
வகை வகையாய் வந்திடும்.
தாழ்வுகளும் உயர்வுகளும்
தரணியிலே நிகழ்ந்திடும்.

காற்றடிக்கும் பருவம் போல் - ஒரு
காலம் சந்தோசம்.
நேற்றிருக்கும் நிலை போல
நிலைப்பதோ எதுவுமில்லை!

உண்மையின் வாழ்வினை
உயர்ந்தவனும் விரும்புகிறான்.
நன்மை நீ செய்து வாழ(ல்)
நாளை சுவனம் உனதாகிடும்!

சுடர் ஒளி (22.06.2014)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒரு கிராமத்தின் கவிதைகள்

**(தாலாட்டுப் பாடல்)**

கண்களை மூடி
கண்ணா உறங்குவாய்!
அம்மா பாடுறேன்
அழகே உறங்குவாய்!
ஆராரோ ஆரிராரோ!

**(ஒப்பாரிப் பாடல்)**

பொத்திப் பொத்தி
வளர்த்த மகன்
கண்ணுக்குள்ளே இருந்த மகன்
ஊருக்கு வரும் போது
பிணமாகி வந்தானே
யாரிடம் சொல்லி அழுவேன்
யாது கெட்டுப் போனேனே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**(காதல் பாடல்)**
பிரியாமல் இருந்திட என்னவனே
பிடிப்பாயா என் கையினை
உரிய தோர் நாள் பார்த்து
உரித்தாக்கு இந்த கன்னியினை!

**(தொழில் பாடல்)**
காலை எழுவாயே தோழா
காட்டுக்குச் செல்லலாம்
பாலை மரத்திலே - நல்ல
பழமும் பறிக்கலாம்
வேலை வேண்டுமே - எம்
வேதனை தீர்க்க வா தோழா!

தினகரன் (26.09.2014)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உன்னால் நான்..!

என் கருத்துக்கள்
மதிக்கப்படுவதற்குப் பதிலாக
மிதிக்கப்படுகிறது

எப்போதாவது ஒரு தடவை
என் கருத்துக்களையும்
ஏற்றுக் கொள்ள வேண்டும்
என்று நீ
நினைத்ததுண்டா?

வெறும் படுக்கையின்
சுகமே
வாழ்க்கையாகுமா?
என நீ
சிந்தித்ததுண்டா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொழுது விடியாமல்
இருக்கின்ற
ஓர் இரவில்
வலியேற்பட்டு
அழாத குறையாய்
மனசு உளரும்
வார்த்தைகளை
வாய் திறந்து
சொல்ல முடியாமல்
உன்னால் நான்
மௌனமாகிறேன்!

தினகரன் (20.09.2014)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம் காதலின் கரு

குளிர்மை தரும் பனித்துளி போல
இன்பம் உனக்குள் நிறைந்திருக்கும்
கூடி கலையும் மேகம் போல
உள்ளம் உனது திறந்திருக்கும்

வானமே சில நாள் மழைதான்
உன்னோடு வாழ்வதோ
என்றும் மழைதான்

காற்றோடு பேசும் வார்த்தை
காதிலே நீயும் கேட்டிருப்பாய்
நூலில் விடும் பட்டம் போல
கொஞ்ச தூரம் பறந்திருப்பாய்

காதல்தான் உனக்கும்
எனக்கும் கவிதை தந்தது
கண்களே நம் காதலின்
கருவாய் இருந்தது

தினமுரசு (13.11.2014)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எனக்கிருக்கும் ஆசைகள்

எனக்கிருக்கும் ஆசைகளை
என்ன வென்று கேட்பீரோ?
மனம் திறந்து சொல்லுகிறேன்
மறுக்காமல் செய்வீரோ?

அனா, ஆவனா படித்திட
அம்மா எழுதுகோல் தருவீரோ?
வானம் பெய்த மழையில்
கப்பல் விட விடுவீரோ?

வண்ணாத்திப் பூச்சி பின்னால்
வலம் வந்தால் தடுப்பீரோ?
கண்களை மூட விட்டு
காட்டுவதைக் கொடுப்பீரோ?

திருவிழா தெரு வெங்கும்
திறந்திருக்கும் கடைகளிலே
'உரு' வான மொம்மைகளில்
ஒன்றை வாங்கித் தருவீரோ?

சுடர் ஒளி (06.04.2014)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செல்லமே!

கிளை விட்டுக் கிளை
கீச்சிட்டுப் பாயும் அணிலே
தொலை தூரம் செல்லாதே
தேடிட என்னை வைக்காதே!

வாழைப்பழம் மாம்பழம்
வாங்கியுள்ளேன் உனக்காக
காலை உணவை மறந்தாயே
கவலை எனக்குத் தந்தாயே!

கோடு போட்ட அணிலே
கோபம் கொள்ள வைக்காதே
காடு மேடு அலைந்து
கஷ்டம் எனக்குத் தந்திடாதே!

செல்லமே எனக்கு நீதானே
சொல்லும் வழி நடப்பாயே
மெல்ல வந்து சேர்வாயே!
மகிழ்ச்சி எனக்குத் தருவாயே!

சுடர் ஒளி (16.03.2014)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நான் ஒரு வேலி

கற்கள் சிறிதானது
வீசுகின்ற போது
அதன் வேகமும்
குறைவான தே!
நானும் சிறியவன்
இருந்தாலும்...
அவை
உங்கள் உள்ளங்களை
காயப்படுத்தும்
என்ற நம்பிக்கையில்
மீண்டும்
கற்களைப் பொறுக்குகின்றேன்
புனித தலத்தையும்
எனது மார்க்கத்தையும்
உங்களிடமிருந்து
பாதுகாத்து கொள்ள
நான்.

தினகரன் 13.12.2014



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இனித் தொடரும்!

இடை விலகல்
மாணவர்களைத் தேடி
ஆசிரியர்கள்
ஊருக்குள் நடை பயணம்
பாடங்கள் முடக்கப்பட்டன
கணக்கெடுப்பு முடிந்ததோ
தெரியவில்லை
பாடசாலை விடும் நேரமானது!

இப்போது ஆசான்களும்
வகுப்பறையில்
அடிக்கடி காணாமல்
போவதால்
இடை விலகல்
இனித் தொடரும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மெய்யோன் நீயே!

அல்லாஹ் அல்லாஹ்!
அமைதி தருவாயே
இல்லாத மனிதர்க்காய்
இரங்கி வருவாயே!

மெய்யோன் நீயே
மென்மையாளன் நீயே
செய்யும் தொழிலில்
சிறப்பைத் தருவாயே!

வணக்கம் உனக்கே
வாகை உனக்கே
நினைக்கும் வாழ்வை
அமைத்துத் தருவாயே!

உருண்ட உலகம்
உனக்கே சொந்தம்
இருண்ட வாழ்வை
இனி நீ ஒளிரச் செய்வாயே!

மித்திரன் வாரமலர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காதலே நிம்மதி

சில வாரங்களில்
சில மாற்றங்கள்
உனக்குப் பிடித்த மாதிரி
என்னை
மாற்றிக் கொண்டேன்!

என்னழகு
எனக்குத் தெரிந்தது
உன்னை நான்
காதலித்த பின்னர்தான்

காதல்
அழுக்கை
அழகாக்கும்!

காசே
இல்லாத திருமணம்
காதல்தான்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தனையோ
நல்ல விடயங்களை
உள்ளடக்கிருக்கும்
உண்மைக் காதலுக்கு
அழிவே கிடையாது!

உன்னை நான்
காதலிக்காமல்
போயிருந்தால்!
இந்த அரிய
உண்மை(யும்)
என்னை விட்டும்
.........................
தூரத்திலேதான்!

ஜனனி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசைகள் பல விதம்!

ஏட்டினில் இல்லாத ஒன்றை - நான்
எடுத்துக் கூறிட ஆசை
பட்டினி படுத்தும் பாட்டை - நான்
பாரினில் ஒழித்துவிட ஆசை
நாட்டுக்கு நாடு சென்று - நான்
நல்லது செய்திட ஆசை
தொட்டிலில் அழும் பிள்ளைக்கு நான்
தாலாட்டுப் பாடிட ஆசை!

சித்திரை வந்திங்கு - என்
சிந்தனையைத் தெளிவாக்கிட ஆசை
நித்திரையில் நாள்தோறும் - நான்
நிம்மதி காண ஆசை
சத்தியம் நிலைத்து என் நாடு
சமாதானம் கண்டிட ஆசை
புத்தியுள்ளவர்களுடன் வாழ்ந்து - நான்
புதுமைகள் செய்திட ஆசை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடலும் கரையும் கை கோர்க்கையில்
களிப்பு என்னில் பொங்கிட ஆசை
உடலில் என்னுயிர் நிலைத்து - நான்
உயிர்களிடத்து அன்பு காட்டிட ஆசை
மடல்கள் பல அனுப்பி - நான்
மாதுகளுடன் நட்பு கொண்டிட ஆசை
படரும் கொடிகளைக் கண்டு - நான்
பாய்ந்து பிடித்திட ஆசை !

வான்மீது தவழும் நிலவுதனை - நான்
விலைக்கு வாங்கிட ஆசை
மான்கள் துள்ளிப் பாய்ந்திடும் - அந்த
மாட்சிமை கண்டிட ஆசை
தேன் சிந்தும் பூக்களை - நான்
தேடிப் பறித்திட ஆசை
மண்ணிலே என்னாவி சேரமுன் - நான்
மனிதனாக வாழ்ந்து விட ஆசை !

தினகரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது பொம்மை

கொஞ்சம் கொஞ்சம் வாய் திறந்து
பேசிடுவேன் அம்மா!
அதை திருத்தமாய் சொல்லிடுவாய்
எனது அன்பு அம்மா!

அப்பா வாங்கித் தந்த
பொம்மையிது அம்மா
அதை கொஞ்சிக் கொஞ்சி
விளையாட வேண்டுமே அம்மா!

பொம்மையின் கைகளைப்
பிடிக்க வேண்டும் அம்மா
அது நடந்து போகையிலே
பார்த்து ரசிப்பேன் அம்மா!

உண்ணும் உணவில்
கொஞ்சம் நானும்
கொடுத்துத் தின்ன ஆசை அம்மா - அது
உண்ணவில்லை கவலை
கொண்டேன் அம்மா!

உறங்கும்போது பொம்மையினை
அணைத்திடுவேன் அம்மா!
உறவு என்று சொல்லி விட
எனக்கு பொம்மை அம்மா!

சுடர் ஒளி (13.04.2014)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு கிராமியக் கவிதை

வெள்ளம் ஏறுதே
வள்ளம் வேண்டுமே
நல்ல களப்பிது
மீனு பாயுதே!

சேதி சொல்லிட - ஒரு
சனமும் இல்லையே
ஆதி ஒருவனே
அன்னவர் எங்கேயோ?

மீதியுள்ளவர் கடலுக்கு
மீன் பிடிக்கச் செல்லவே
பாதி வழியிலே என்
பதியை யாரும் கண்டீரோ?

நேரமாகியும் என்
நிலம் வந்து சேரல
வேறு யாரிடமும் இந்த
விசயம் சொல்லலாமோ?

அழுத மனசெந்தன்
அடக்க முடியல - மாலைப்
பொழுது முன்னமே
போனவர் வருகணுமே!

(சுடர் ஒளி 08.06.2014)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தடைகள் தாண்டிய கவிஞன்

கிழக்கி லங்கை தனிலே;
'கிண்ணி யா'வில் பிறந்தோன்.
அழகிய அப்துல் மனாபு;
அன்னை 'பாத்திமா' பெற்றோர்.
பழகிட நற்குண 'கஸ்புள்ளா;
படைப்பார் கவிதைகள் மரபிலே.

தொன்னூறு களிலே; கவிதையைத்;
தொட்டு அறிமுக மானவர்;
பின்னிவர் பள்ளிப் போட்டியில்;
பரிசுகள் அதிகம் பெற்றவர்;
கிண்ணியா 'அல் அக்ஸா' தனிலே;
கல்வி 'ஓ எல்' கற்றவர்.

தரமுடை நற்கவி தைகள்;
தந்து மனதில் நின்றவர்.
பிரதேச மாவட்டப் போட்டியில்;
பிரவேசம் செய்து வென்றவர்;
இரண்டா யிரமாண் டிலிவர்;
'அண்ணல்' சஞ்சிகை செய்தவர்.

பற்பல சஞ்சிகை பேப்பரில்;
படைத்தார் கட்டுரை கவிதைகள்;
'கற்க கசடற' நூலிலே
கட்டுரை செய்தார் சிறுவர்க்கு.
நிற்க வில்லை; இன்னும்;
நிறைய படைக்க வுள்ளார்.

படைத்த கவிதையைச் 'சுனாமி'
பறித்த போதில் நொந்தவர்.
இடைவி டாமல் எழுதியே;
இந்நூ லினைத் தந்தவர்;
தடைகள் தாண்டி கவிதைகள்;
தந்தார் மகிழ்ச்சி 'நெஞ்சினிலே'

**வி.எம். அன்ஸார்**
**கிண்ணியா 02**



ISBN: 978-955-4840-00-3

Rs. 200.00 SLR

LAYOUT & DESIGNED: M.A. M. ASMY (075 7022680)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org